# කෘෂිකර්ම අමාත්‍යාංශය
# கமத்தொழில் அமைச்சு
# Ministry of Agriculture

80/5, "ගොවිජන මන්දිරය", රජමල්වත්ත පටුමග, බත්තරමුල්ල.
80/5, "கொவிஜன மந்திரய", ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.
80/5, "Govijana Mandiraya", Rajamalwatte Avenue, Battaramulla, Sri Lanka.
කාර්යාලය அலுவலகம் Office – 2869553, 2888902, 2872097. ෆැක්ස් தொலைநகல் Fax – 2868910


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | NFS/FCG(P)/Circular-2017/18 Maha | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2017/09/ 04 |

**2016 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவினை நடைமுறைப்படுத்தல்**
**<u>நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு உரங்களை கொள்வனவு செய்வதற்காக நிதி மானியம் வழங்குதல்</u>**
**<u>2017/18– பெரும்போகம்</u>**

1. மானியக் கொள்கை

1.1. நெற் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு சொந்தமான உயர்ந்தபட்ச அளவான 02 ஹெக்டேயர் (5 ஏக்கர்)வயற்காணிகளுக்கு (வருடத்திற்கு உயர்ந்தபட்சம் 2 போகங்கள்) சிறுபோகத்திற்கு 25,000 ரூபாவும்பெரும்போகத்திற்கு 25,000ரூபாவும் என்ற அளவில் அமையுமாறு உரக் கொள்வனவுக்கான பணமாக50,000 ரூபாஒரு விவசாயியிற்கு கிடைக்கப்பெறும்.

1.2. அதற்கேற்ப 01 ஹெக்டேயர் (2.5 ஏக்கர்) வயற்காணிக்கு ஒரு போகத்திற்கு 12,500 ரூபா வீதம் 02 ஹெக்டேயர் (5 ஏக்கர்) வரை ரூபா 25,000 அளவிலான நிதி கிடைக்கப்பெறுமாறு கணக்கிடும் வசதிக்காக விவசாயிபயிரிடும் வயற்காணிகளுக்கு கிடைக்கவேண்டிய நிதியின் அளவு இச்சுற்றுநிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

1.3. நெல் மானியத்தினை பெறுவதற்கான கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்பவும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஒப்புதல்களுக்கேற்பவும் எதிர்வரும் போகங்களில் நெற்பயிர்ச்செய்கைக்கு தடையாக அமையாதவாறு குறித்த போகத்தில் அந்நெல் வயற்காணிகளில் பயிரிடப்படும் வேறு பயிர்களுக்கும் அவ்வாறு பயிரிட உத்தேசித்துள்ள காணிகளின் அளவுகளுக்கேற்ப செம்மையாக்கல்கள் மேற்கொண்டு நிதி மானியத்தை வழங்கலாம்.

1.4. யூரியா, ரீ.எஸ்.பீ. மற்றம் எம்.ஓ.பீ ஆகிய 50 கி.கி. நேரடி உர மூடைகளின் உயர்ந்த பட்ச சில்லரை விலை ரூபா 2,500 ஆகும் என்பதுடன் அரச மற்றும் தனியார் உரக் கம்பனிகளினதும் விநியோக முகவர்கள், கமநல சேவை நிலையம் மற்றும் நடமாடும் விநியோக வாகங்கள் மூலம் நெல் விவசாயிகளுக்கு தமது பிரதேசத்திலேயே உரத்தினை கொள்வனவு செய்யக்கூடியவாறு அரச உரக் கம்பனிகள் மற்றும் தனியார் கம்பனிகள் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும்.

1.5. 2016 சிறுபோகம், 2016/17 பெரும்போகம் மற்றும் 2017 சிறுபோகங்களில் மானியத்தினை பெற்றுக்கொண்டு எனினும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளாத விவசாயிகளுக்கு 2017/18 பெரும்போகத்தில் மானியம் கிடைக்கப்பெறாது. 2017 சிறுபோகத்திலும் மேற்குறித்த போகங்களிலும் விண்ணப்பித்து எனினும் விண்ணப்பித்த காணியின் ஒரு பகுதியில் பயிர்ச்செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கு 2017/18 பெரும்போகத்தில் விண்ணப்பிக்கும் காணியின் அளவுக்கேற்ப செம்மையாக்கல்கள் செய்து மானிய நிதியினை வழங்கமுடியும்.

1.6. இம்மானியத்தினை பெறுவதற்கு விவசாயிகளின் வயற்காணிகள் கமநலச் சேவை அதிகாரப்பிரிவின் கிராம சேவகர்பிரிவிற்கேற்ப பதிவு செய்திருப்பது கட்டாயமானது. மானிய நிதிக்காக விண்ணப்பித்தலை இலகுபடுத்துவதற்கு அப்பதிவு தொடர்பான ஆவணத்தின் பிரதிகள் கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் (க.ஆ.உ.உ) அலுவலகம் மற்றும் கிராம சேவகர் காரியாலத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். மகாவலி வலயப் பகுதி தொடர்பில் மகாவலி வயற் பிரிவு முகாமையாளர் பொறுப்பில் ஊள்ள காணிகள் அடையாளப்படுத்தும் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கு இலக்கத்தினை இதற்காக பயன்படுத்த வேண்டும்.


| | | | | |
|---|---|---|---|---|
| ලේකම්<br>செயலாளர்<br>Secretary | දුරකථන | தோலைபேசி | Telephone | - 011-2868920 |
| | ඊ - මේල් | ஈமெயில் | E- mail | - sec.agri@yahoo.com |
| | ෆැක්ස් | தொலைநகல் | Fax | - 011-2863497 |

1.7. மேற்குறித்த விடயங்களுக்கு மேலதிகமாக நெல் உர மானியயத்திற்கு விண்ணப்பிக்கும் விவசாயிகள் பின்வரும் விடயங்களையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்

1.7.1. பயிர்ச்செய்கைக்காக வைக்கோல், சேதனப்பசளைகளை பயன்படுத்துவதாக கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளரினால் உறுதிசெய்யப்பட்டிருத்தல்

1.7.2. விவசாயிகளினால் தமது நெற்பயிர்ச்செய்கையினை மேற்றகொள்ளும் வயற்காணிக்குறிய பிரதேசத்திலுள்ள கமநலச் சங்கத்தில் அங்கத்துவம்பெறுவது கட்டாயமானது என்பதுடன் கால்வாய்களை உரிய முறையில் சுத்தம் செய்திருப்பதனை அக்குறித்த கமநலச் சங்கத்தினால் சான்றுதழை பெற்றிருத்தல்.

**2. நிதி மானியத்திற்கு விண்ணப்பித்தலும் சிபாரிசுசெய்தலும்**

2017/18 பெரும்போகத்தில் நெல் உரமானிய நிதியத்திற்குஉரித்துடையவர்களை இரு பிரதான குழுக்களின் கீழ் வகைப்படுத்த வேண்டும்

2.1. 2016/17 பெரும்போகம் மற்றும் 2017 சிறுபோகத்தில் நெல் உர மானிய நிதியத்தினை பெற்ற மற்றும் நெல் உர மானிய நிதியத்தினை கையளிக்கும் நிகழ்விற்காக தயாரிக்கப்பட்டுள்ள தரவுத் தளத்தில் தகவல் அடங்கிய விவசாயிகள்,

2.2. மேற்குறித்த தரவுத்தளத்தில் இதுவரை தகவல்கள் உள்ளடங்கப்படாத எனினும் இம்முறை 2017/18 பெரும் போக நெல் உர மானிய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவுசெய்ய எதிர்பார்க்கும் விவசாயிகள்.

2.3. மேற்குறித்த 2.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள விவசாயிகளின் குழுவுக்காக2017/18 பெரும் போகத்திற்கான நெல் உர மானிய நிதி வழங்கும் நிகழ்ச்சியானது கீழேயுள்ள இலக்கம் 3ல் குறிப்பிட்டுள்ள முறையியலுக்கு ஏற்ப நடைமுறைபடுத்த வேண்டும்.

2.4. மேற்குறித்த 2.2ல் குறிப்பிட்ட குழுவிற்குறிய விவசாயிகள் 2017 சிறுபோகத்தில் பயன்படுத்திய உர மானிய விண்ணப்படிவத்தினை கமத்தொழில் ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் (க.ஆ.உ.உ)/கிராம உத்தியோகத்தர்/மகவலி அலகின் முகாமையாளிடமிருந்து பெற்றுக்கொண்டு உரிய முறையில்பூர்த்திசெய்து பிரதேசத்திற்குறிய கமநல சங்கத்தினால் சிபாரிசுடன் அதனை அவர்களிடம் மீளஒப்படைத்தல் வேண்டும். இம்மாதிரி விண்ணப்பப் படிவத்தினை www.aginfo.lk இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளதுடன் கமநல சேவை அதிகாரப்பிரிவு மட்டத்தில் விண்ணப்பப் படிவத்தினை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் தரவிரக்கம் செய்யப்பட்டு உரிய பிரதேங்களுக்கு தேவையான விண்ணப்பப்படிவங்களைதகுந்த முறையில் அச்சிட்டு கள உத்தியோகத்தரிடம் கைளிக்க வேண்டும்.

2.5. மேலே 2.4 இற்கேற்ப விவசாயிகளினால் பூர்த்திசெய்யப்பட்டு கள உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்படும் விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முறைக்கேற்ப சிபாரிசு செய்தல் வேண்டும்

2.5.1. 2016 சிறுபோகம், 2016/2017 பெரும்போகம் மற்றும் 2017 சிறுபோகங்களில் நெல் பயிரிடாது இப்போகத்தில் முதன்முறையாக நிதி மானியத்திற்கு விண்ணப்பிப்பதாயின் உரித்துடைமையை உறுதிசெய்வதற்கு தேவையான விவசாயியின் பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை இலக்கம், காணியின் அளவு (ஏக்கர்களில்) காணியின் அமைவிடம், உறுதிசெய்துகொள்ளக்கூடிய தகவல்கள (google Mapping Code No தவிற) தங்களின் புகைப்படம் மற்றும் வங்கிக் கணக்கு விபரம் என்பவற்றைபடிவத்தில் சரியாக பூர்த்தி செய்தல் அத்தியாவசியமானது.

2.5.2. மானியத்திற்கு விண்ணப்பிக்கும்போது தங்கள் புகைப்படத்துடன் விண்ணப்பப்படிவத்தினை ஒப்படைத்த விவசாயிகள் இங்கு புகைப்படத்தினை இணைப்பது கட்டாயமானதல்ல.

2.5.3. உர மானியத்திற்கு விண்ணப்பிக்கும் விவசாயிகள் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை கட்டாயமாக வழங்கவேண்டும் என்பதுடன் அடையாள அட்டை இல்லாதபட்சத்தில் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை உறுதி செய்வதற்காக செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தினை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டினை முன்வைக்க முடியும். இது தொடர்பாக வேறெந்த மாற்றுவழிகளையும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.